අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. } ED/01/12/08/10/01
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. }
දිනය / திகதி / Date } 2018.09.10

சுற்றுநிருப இல : 37/2018

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டங்களிற்குப் பொறுப்பான பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அதிபர்களுக்கும்,

## சுபக புலமைப் பரிசில் வேலைத்திட்டம்

01. எதிர்கால சவால்களை வெற்றிகொள்வதற்குத் தேவையான திறமைகளுடன் கூடிய படைப்பாற்றல் மிக்க இளைஞர் சமுதாயத்தினை உருவாக்கும் பொருட்டு, பாடசாலை மாணவர்களினது திறமைகளை விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு இந்த சுபக புலமைப்பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

02. **நோக்கங்கள்**

2.1 சுபக மாணவர்களினது விசேட திறமைகளை விருத்தி செய்வதோடு, அவர்கள் கல்வி இலக்குகளை அடைவதற்கான சந்தர்ப்பத்தினையும் பெற்றுக்கொடுத்தல்.

2.2 நாட்டின் அபிவிருத்திக்கு விசேட பங்களிப்பினை வழங்கக்கூடிய பல்வேறு துறைகளினூடாக விசேட திறமைகளை காட்டி வரும் மாணவர்களை மேலும் பலப்படுத்தி முன்னுக்கு கொண்டுவருதல்.

03. **புலமைப்பரிசிலிற்காக விண்ணப்பிப்பதற்கு அவசியமான தகைமைகள்**

3.1 இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

3.2 உரிய வருடத்தில் அரச பாடசாலை ஒன்றில் தரம் 12 இல் கல்வி கற்பவராக இருப்பதோடு சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துறைக்கான உயரிய திறமையினை வெளிப்படுத்தியுள்ள மாணவனாக/ மாணவியாக இருத்தல் வேண்டும்.

3.3 ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக தண்டனை வழங்கப்படாத மாணவனாக/ மாணவியாக இருத்தல் வேண்டும்.

3.4 விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் துறைக்குரிய செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபடுதல் வேண்டும்.

04. **விண்ணப்பப் படிவங்களை முன்வைத்தல்**

4.1 இது தொடர்பாக இணைப்பு 01லுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் மாணவர்களினால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் இரண்டு பிரதிகளுடன், உரிய சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து 20018.10.05 க்கு முன்னர் தற்போது க.பொ.த (உ/த) கற்றுக்கொண்டிருக்கும் பாடசாலை அதிபரினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். க.பொ.த (உ/த) கற்பதற்கு வேறு பாடசாலை சென்ற மாணவரகள், தாம் க.பொ.த (சா/த) கற்ற பாடசாலை அதிபரின் பரிந்துரையுடன் க.பொ.த (உ/த) கற்கும் அதிபரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

4.2 இந்தப் புலமைப்பரிசில் விண்ணப்படிவம் (இணைப்பு 01) மற்றும் அது தொடர்பான அறிவுறுத்தல்ளை பாடசாலை அறிவித்தல் பலகையில் இடுவதற்கு அதிபர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister } +94112784832 / +94112784825 / minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary } +94112784811 / +94112785162 / secretary.education@moe.gov.lk

4.3 குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களும், உரிய விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும்.

4.4 இப் புலமைப் பரிசிலானது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 3 பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகின்றது.

i. பிரிவு இல 01 - புதிய கண்டுபிடிப்புக்களுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள்
ii. பிரிவு இல 02 - அழகியல் செயற்பாடுகளுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள்
iii. பிரிவு இல 03 - விளையாட்டிற்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு பிரிவுக்குமாக தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும்.

4.5 மேலே 3ம் பந்திக்கு ஏற்ப அடிப்படைத் தகைமைகளை உடைய மாணவனுக்கு அல்லது மாணவிக்கு தமது திறமை அடிப்படையில் 4.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தப் பிரிவின் கீழேனும் விண்ணப்பிக்க முடியும்.

## 05. தேர்ந்தெடுக்கும் முறைமை

இந்த சுற்றறிக்கையின் 06ம் பிரிவில் குறிப்பிட்டுள்ள புள்ளியிடும் முறைமைக்கிணங்க பின்வரும் முறைகளைப் பின்பற்றி, ஒவ்வொரு மட்டத்திலும் விண்ணப்பங்களும் சான்றிதழ்களும் பரிசீலிக்கப்பட்டு விண்ணப்பத்தின் இரு பிரதிகளிலும் உரிய தீர்மாணிக்கப்பட்ட புள்ளிகள் இடப்பட வேண்டும்.

### 5.1 பாடசாலை மட்டம்

i. பாடசாலைக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் அனைத்தினதும் அடிப்படைத் தகவல்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும் (சீ.ஆர் புத்தகத்திலும்/ கணனியிலும்)

ii. அதிபரின் பங்குபற்றலுடன் மற்றும் இரு சிரேஷ்ட ஆசிரிய ஆசிரியர்களையும் கொண்ட (மூவர் அடங்கிய) பாடசாலை தெரிவுக் குழுவின் மூலம் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வழங்கப்படும் புள்ளிகள், நிரல் 01ல் இடப்படல் வேண்டும்.

iii. பாடசாலைக்கு கிடைக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை 150ஐ விட அதிகமெனில் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் விடயத்தினை இலகுபடுத்துமுகமாக பிரதி/உதவி அதிபர் ஒருவர் அல்லது பகுதித் தலைவர் ஒருவரின் தலைமையின் கீழ் பாடசாலை ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுக் குழுக்களை நியமிக்க முடியும். அதே போன்று வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பப்படும் மாணவர் பெயர் பட்டியல் அதிபர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

iv. அந்தந்தப்பிரிவின் கீழ் ஒவ்வொரு மாணவ, மாணவியினதும் தகைமைகள் உறுதிப்படுத்தப்படுவதோடு சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் பரிசீலிக்கப்பட்டு சுற்றறிக்கையின் படி தகைமைகள் பூரணப்படுத்தப்பட்ட சகல விண்ணப்பதாரிகளதும் பெயர் பட்டியல் ஒவ்வொரு பிரிவின் கீழும் வேறுவேறாக இணைப்பு 02 (A) க்கிணங்க மொத்தப்புள்ளிகள் வழங்கப்பட வேண்டும். அந்த இணைப்புப் படிவத்தின் (மென், வன் பிரதிகள்) உடன் விண்ணப்பபடிவங்கள், சான்றிதழ்களின் பிரதிகள் அனைத்தும் கோவைப்படுத்தப்பட்டு அதிபர் ஊடாக 2018.10.12க்கு முன்னர் வலயக் கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். அதன் மற்றொரு பிரதி பாடசாலையில் பேணப்பட வேண்டும்.

### 5.2 வலய மட்டம்

i. வலய மட்டத்தில் சுபக புலமைப்பரிசில் வேலைத்திட்டத்திற்கென நிறைவேற்று அலுவலர் ஒருவர் இணைப்பாளராக நியமிப்பதற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

ii. இந்த சுற்றறிக்கையின் இணைப்பு 02 (A) படிவத்துடன் அந்தந்தப் பாடசாலைகளுக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ்கள் மேற்குறிப்பிட்ட இணைப்பாளரின் பங்குபற்றலுடன் பின்வருமாறு பரிசீலக்கப்பட வேண்டும்.

iii. வலயக் கல்விப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ், சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர் ஒருவர் மற்றும் இன்னும் இரு நிறைவேற்று அலுவலர்களின் பங்குபற்றலுடன் (மூவர் கொண்ட) வலயத் தெரிவுக் குழு நியமிக்கப்பட வேண்டும். சுற்றுநிருபத்ததின் படி வழங்கப்படும் புள்ளிகள் நிரல் 2ல் இடப்பட வேண்டும்.

iv. வலயக் கல்விக் காரியாலயத்துக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் 150னை தாண்டும் பட்சத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தெரிவுக் குழுக்கள் நியமிக்கப்பட முடியும். என்றாலும் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பப்படும் அனைத்து விண்ணப்பங்களும் வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

v. இங்கு வலயக் கல்விக் காரியாலயத்திலிருந்து அனுப்பப்படும் புள்ளிகளுக்கும் பாடசாலைத் தெரிவுக் குழுவின் புள்ளிகளுக்கும் வேறுபாடு தோன்றுமிடத்து வலயக் கல்விக் காரியாலயத்தின் புள்ளிகள் இறுதியானதாகக் கொள்ளப்படும்.

vi. ஒவ்வொரு பிரிவின் கீழும் 15 புள்ளிகளுக்கும் அதிகம் பெற்ற தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் பெயர் பட்டியல் வேறு வேறாக இணைப்பு 02 (B) க் கிணங்க மொத்தப் புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். அவ் இணைப்பின் (மென், வன் பிரதிகள்) பிரதிகள், விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பன வலயக் கல்விப் பணிப்பாளரின் சான்றுப்படுத்தலுடன் 2018.10.26 க்கு முன் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

5.3 மகாண மட்டம்

i. மாகாண மட்டத்தில் சுபக புலமைப்பரிசில் வேலைத்திட்டத்திற்கென நிறைவேற்று அலுவலர் ஒருவர் இணைப்பாளராக நியமிப்பதற்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

ii. இந்த சுற்றறிக்கையின் இணைப்பு 02 (A) படிவத்துடன் அந்தந்தப் வலயக் கல்விக் காரியாலயங்களுக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ்கள் மேற்குறிப்பிட்ட இணைப்பாளரின் பங்குபற்றலுடன் பின்வருமாறு பரிசீலக்கப்பட வேண்டும்.

iii. மாகாண கல்விப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ், சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர் ஒருவர் மற்றும் இன்னும் இரு நிறைவேற்று அலுவலர்களின் பங்குபற்றலுடன் (மூவர் கொண்ட) மாகாண தெரிவுக் குழு நியமிக்கப்பட வேண்டும். சுற்றுநிருபத்ததின் படி வழங்கப்படும் புள்ளிகள் நிரல் 3ல் இடப்பட வேண்டும்.

iv. மாகாண கல்விக் காரியாலயத்துக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் 150னை தாண்டும் பட்சத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தெரிவுக் குழுக்கள் நியமிக்கப்பட முடியும். என்றாலும் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்படும் அனைத்து விண்ணப்பங்களும் மாகாண கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

v. அந்தந்த மாகாண ரீதியாக சுற்றுநிருபத்திற்கிணங்க ஒரு பிரிவில் ஆகக்கூடிய புள்ளிகளை பெறும் மாணவர்களை தெரிவு செய்யவேண்டியதோடு மூன்று பிரிவிகளிலும் சம எண்ணிக்கையான மாணவர்கள் தெரிவு செய்யப்படவேண்டும். குறித்த பிரிவில் தேவையான எண்ணிக்கையை விட குறையும் போது அவற்றை வேறு பிரிவிலிருந்து தெரிவு செய்ய முடியும்.

**அட்டவணை இல 01:** ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட வேண்டிய புலமைப்பரிசில்தாரிகளின் எண்ணிக்கை

| மாகாணம் | தெரிவு செய்யப்பட வேண்டிய மொத்தப் புலமைப்பரிசில்தாரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேல் | 200 |
| மத்திய | 135 |
| தென் | 125 |

| | |
|---|---|
| வடமேல் | 125 |
| சப்ரகமுவ | 95 |
| கிழக்கு | 90 |
| வட மத்திய | 70 |
| ஊவா | 70 |
| வட | 65 |

*(குறிப்பு:- ஒவ்வொரு மாகாணத்திலும் 2017 ஆம் ஆண்டில் தரம் 11 ல் கல்வி கற்ற மாணவர் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது)*

i. இவ்வாறு தெரிவு செய்யப்படும் மாணவர்கள் சுபக புலமைப்பரிசிலுக்கு தகுதி பெறுவதுடன் பாடசாலை அதிபர்களுடாக மாணவர்களுக்கு அறிவித்து அவர்களின் வங்கி கணக்கிலக்க (இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கி) விபரங்கள் உறுதிப்படுத்தப்பட்டு இணைப்பு 03 ன் ஊடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ii. அதன்படி, மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர் பெயர் பட்டியல் இணைப்பு 04ல் காட்டியவாறு தயாரிக்கப்பட வேண்டும். அதன் வன் மற்றும் மென் பிரதிகள் வங்கிக் கணக்கிலக்க நிழற்பிரதிகள் என்பன மாகாண கல்விப் பணிப்பாளர் ஊடாக 2017.11.16க்கு முன்னர் கல்வி அமைச்சின் பாடசாலை செயற்பாடுகள் கிளைக்கு அனுப்பி வைக்கப்படுவதோடு பெயர் பட்டியலின் பிரதிகள் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**5.4 தேசிய மட்டம்**

i. மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்ட புலமைப் பரிசில் தாரிகளுக்கு சுபக புலமைப்பரசில் வழங்கப்படும்.

ii. மாகாண மட்டத்தில் அனுப்பிவைக்கப்படும் புலமைப்பரிசில்தாரிகளுக்கு மேலதிகமாக சர்வதேச மட்டத்தில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்காக கல்வி அமைச்சின் விசேட அனுமதியுடன் புலமைப்பரிசில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

5.5 மாணவ, மாணவிகள் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளில் விண்ணப்பித்தாலும் இறுதியில் ஒரு பிரிவில் மாத்திரமே தெரிவு செய்யப்படுவர்.

**06. தேர்ந்தெடுப்பதற்காக பயன்படுத்தப்படும் துறை, நிபந்தனைகள் மற்றும் புள்ளி வழங்கும் முறைமை**

மேலே 4.4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மூன்று பிரிவுகளின் கீழ் அதாவது புதிய படைப்புக்கள், விளையாட்டு மற்றும் அழகியல் துறைகளை அடிப்படையாகக் கொண்டு விசேட நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

இதன்போது மாணவர்கள் குறித்த வருடத்திலிருந்து 04 வருடங்களினுள் பெற்றுக் கொண்ட வெற்றிகள் மாத்திரம் கருத்திற் கொள்ளப்படுவதோடு விசேட நியதிகளின் கீழ் புள்ளிகள் பெற்றுக்கொண்ட மாணவர்கள் மாத்திரமே புலமைப்பரிசிலுக்கு தகுதி பெறுவர்.

**i. விசேட நியதிகள் - உச்ச புள்ளிகள் 60**

இதன் கீழ் மாணவன்/ மாணவி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில் ஓர் துறையில் மட்டும் வெளிப்படுத்தும் திறமைகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

அ. புதிய கண்டுபிடிப்புக்களுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

ஆ. அழகியல் செயற்பாடுகளுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

இ. விளையாட்டிற்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

**ii. பொது நியதிகள் பகுதி I – உச்ச புள்ளிகள் 15**

மாணவன்/ மாணவி தாம் விண்ணப்பிக்கும் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவுகள் இரண்டில் வெளிப்படுத்தியுள்ள திறமைகள் உரியவாறு பொது நிபந்தனைகள் 01 இன் கீழ் உள்ள நிபந்தனைகளின் கீழ் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

இதன்போது கருத்திற் கொள்ளும் விடயங்கள் விசேட நியதிகளுக்காகப் புள்ளிகள் வழங்குவதற்கு கருத்திற் கொள்ளப்படாது.

அ. புதிய கண்டுபிடிப்பு (பிரிவு இல. 01)ன் விண்ணப்பிக்கும் மாணவர்களுக்காக - அழகியல் செயற்பாடுகளுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள் மற்றும் விளையாட்டிற்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

ஆ. அழகியல் (பிரிவு இல. 02)ன் விண்ணப்பிக்கும் மாணவர்களுக்காக - புதிய கண்டுபிடிப்புக்களுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள் மற்றும் விளையாட்டிற்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

இ. விளையாட்டு (பிரிவு இல. 03)ன் கீழ் விண்ணப்பிக்கும் மாணவர்களுக்காக - புதிய கண்டுபிடிப்புக்களுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள் மற்றும் அழகியல் செயற்பாடுகளுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

**iii. பொது நியதிகள் பகுதி II – உச்ச புள்ளிகள் 25**

மாணவன்/ மாணவி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில் வெளிப்படுத்தியுள்ள திறமைகள் பொது நிபந்தனைகள் II இன் கீழ் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

அ. சர்வதேச ரீதியிலான திறமைகள்

ஆ. இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

இ. மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட அனைத்துப் பாடங்களுடன் தொடர்பான செயற்பாடுகள்

ஈ. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் தொடர்பான செயற்பாடுகள்

உ. க.பொ.த.(உ.தர) இற்கு அனுமதிக்கப்படுவதற்கான க.பொ.த.(சா.தர) பெறுபேறு

ஒவ்வொரு பிரிவின் கீழும் உள்ள நிபந்தனைகளுக்காக பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் சாராம்சம் அட்டவணை 02 ல் குறிப்பிடப்பட்டுள்ளதோடு உரிய புள்ளி வழங்கும் முறைமை 6.1 மற்றும் 6.2 இன் கீழ் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 02: நியதிகளுக்காக வழங்கப்படும் புள்ளிகள்.**

| நிபந்தனைகள் | பிரிவு இல.01 | பிரிவு இல.02 | பிரிவு இல.03 |
|---|---|---|---|
| **விசேட நிபந்தனைகள் (உச்ச புள்ளிகள் 60)** | புதிய கண்டுபிடிப்புகள் / விஞ்ஞானபூர்வ ஆய்விற்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (60 புள்ளிகள்) | அழகியல் செயற்பாடுகளுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (60 புள்ளிகள்) | விளையாட்டிற்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (60 புள்ளிகள்) |
| **பொது நிபந்தனைகள் I (உச்ச புள்ளிகள் 15)** | i. அழகியல் செயற்பாடுகளுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (15 புள்ளிகள்) | i. புதிய கண்டுபிடிப்புகளுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள் (15 புள்ளிகள்) | i. புதிய கண்டுபிடிப்புகளுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள் (15 புள்ளிகள்) |
| | ii. விளையாட்டிற்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (15 புள்ளிகள்) | ii. விளையாட்டிற்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள் (15 புள்ளிகள்) | ii.அழகியல் செயற்பாடுகளுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள் (15 புள்ளிகள்) |

| | | | |
|---|---|---|---|
| | iii. சர்வதேச ரீதியிலான வெற்றிகள் (05 புள்ளிகள்) | iii. சர்வதேச ரீதியிலான வெற்றிகள் (07 புள்ளிகள்) | iii. சர்வதேச ரீதியிலான வெற்றிகள் (07 புள்ளிகள்) |
| பொது நிபந்தனைகள் **II** (உச்ச புள்ளிகள் 25) | iv. இணைப்பாட விதானச் செயற்பாடுகள் (05 புள்ளிகள்) | iv. இணைப்பாட விதானச் செயற்பாடுகள் (05 புள்ளிகள்) | iv. இணைப்பாட விதானச் செயற்பாடுகள் (05 புள்ளிகள்) |
| | v. அகில இலங்கை ரீதியிலான மொழி, கணிதம், விஞ்ஞானம் தொடர்பான செயற்பாடுகள் (05 புள்ளிகள்) | v. அகில இலங்கை ரீதியிலான மொழி, கணிதம், விஞ்ஞானம் தொடர்பான செயற்பாடுகள் (05 புள்ளிகள்) | v. அகில இலங்கை ரீதியிலான மொழி, கணிதம், விஞ்ஞானம் தொடர்பான செயற்பாடுகள் (05 புள்ளிகள்) |
| | vi. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் தொடர்பான செயற்பாடுகள் (05 புள்ளிகள்) | vi. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் தொடர்பான செயற்பாடுகள் (05 புள்ளிகள்) | vi. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் தொடர்பான செயற்பாடுகள் (05 புள்ளிகள்) |
| | vii. க.பொ.த.(உ.தர) இற்கு அனுமதிக்கப்படுவதற் கான க.பொ.த.(சா.தர) பெறுபேறு (05 புள்ளிகள்) | viii. க.பொ.த.(உ.தர) இற்கு அனுமதிக்கப்படுவதற் கான க.பொ.த.(சா.தர) பெறுபேறு (05 புள்ளிகள்) | viii. க.பொ.த.(உ.தர) இற்கு அனுமதிக்கப்படுவதற் கான க.பொ.த.(சா.தர) பெறுபேறு (05 புள்ளிகள்) |
| | **மொத்தப் புள்ளிகள் 100** | **மொத்தப் புள்ளிகள் 100** | **மொத்தப் புள்ளிகள் 100** |

## 6.1 விசேட நிபந்தனைகள்

### 6.1.1. பிரிவு இல. 01 - புதிய கண்டுபிடிப்புகளுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

புதிய படைப்புக்கள்/ விஞ்ஞான ஆய்வுகள் தொடர்பில் வெளிப்படுத்தியுள்ள திறமைகளுக்கு இதன் கீழ் தரப்பட்டுள்ள அட்டவணை 03 இனை கருத்தில் கொண்டு புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். இங்கு உச்ச புள்ளிகள் வழங்கக்கூடிய ஓர் படைப்பினை மட்டும் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

**அட்டவணை இல 03 – புத்தாக்கத்திற்காகப் புள்ளி வழங்கல்**

| இல. | போட்டி | மட்டம் | நிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | சர்வதேச ரீதியில் முதலாம்/ இரண்டாம்/ மூன்றாம் நிலைகள் | | | 60 புள்ளிகள் |
| 02 | சர்வதேச ரீதியிலான போட்டிகளில் பங்குபற்றுதல் | | | 50 புள்ளிகள் |
| 03 | பேடன் உரிமை பெற்றிருத்தல் | | | 45 புள்ளிகள் |
| 04 | புதிய படைப்புக்கள்/ விஞ்ஞான ஆய்வுகள் | தேசிய மட்டம் | முதலிடம் | 40 புள்ளிகள் |
| 05 | | | இரண்டாமிடம் | 35 புள்ளிகள் |
| 06 | | | மூன்றாமிடம் | 32 புள்ளிகள் |
| 07 | | | திறமை | 30 புள்ளிகள் |
| 08 | | | பங்கேற்றல் | 28 புள்ளிகள் |
| 09 | | மாகாண மட்டம் | முதலிடம் | 25 புள்ளிகள் |
| 10 | | | இரண்டாமிடம் | 20 புள்ளிகள் |
| 11 | | | மூன்றாமிடம் | 15 புள்ளிகள் |
| 12 | | | பங்கேற்றல் | 12 புள்ளிகள் |
| 13 | | வலய மட்டம் | முதலிடம் | 10 புள்ளிகள் |
| 14 | | | இரண்டாமிடம் | 08 புள்ளிகள் |
| 15 | | | மூன்றாமிடம் | 04 புள்ளிகள் |

**உச்சப் புள்ளிகள் 60**

6.1.2. பிரிவு இல. 02 - அழகியல் செயற்பாடுகளுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள்

அகில இலங்கை ரீதியிலான அழகியல் போட்டிகளில் குறித்த வருடத்திற்கு அண்மித்த 4 வருட காலத்தில் அட்டவணை 04 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூடியபட்சம் தனி அல்லது குழுப் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்திய உச்சப் புள்ளிகளை வழங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் மூன்று மட்டும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

**அட்டவணை 04: அழகியல் செயற்பாடுகளுக்காகப் புள்ளி பெற்றுக் கொடுத்தல்**

| இல. | தனியாள்/ குழு | மட்டம் | நிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | தனி | சர்வதேச | 1 | 20 |
| 02 | | | 2 | 19 |
| 03 | | | 3 | 18 |
| 04 | | தேசிய | 1 | 17 |
| 05 | | | 2 | 15 |
| 06 | | | 3 | 13 |
| 07 | | மாகாண | 1 | 12 |
| 08 | | | 2 | 09 |
| 09 | | | 3 | 06 |
| 10 | குழு | சர்வதேச | 1 | 17 |
| 11 | | | 2 | 16 |
| 12 | | | 3 | 15 |
| 13 | | தேசிய | 1 | 13 |
| 14 | | | 2 | 12 |
| 15 | | | 3 | 10 |
| 16 | | மாகாண | 1 | 08 |
| 17 | | | 2 | 05 |
| 18 | | | 3 | 02 |

உச்சப் புள்ளிகள் 60

6.1.3. பிரிவு இல. 03 - விளையாட்டிற்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள்

அகில இலங்கை விளையாட்டுப் போட்டிகளில் குறித்த வருடத்திற்கு அண்மித்த 4 வருட காலத்தில் அட்டவணை 05 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூடியபட்சம் தனி அல்லது குழுப் போட்டிகளில் உச்சப் புள்ளிகளை வழங்கக்கூடிய மூன்று சந்தர்ப்பங்கள் மட்டும் கருத்தில் கொள்ளப்படும்.

**அட்டவணை 05: விளையாட்டுக்களில் பெற்ற வெற்றிக்காக புள்ளி வழங்கல்**

| இல. | தனி/ குழு | மட்டம் | நிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | தனி | சர்வதேச | 1 | 20 |
| 02 | | | 2 | 19 |
| 03 | | | 3 | 18 |
| 04 | | தேசிய | 1 | 17 |
| 05 | | | 2 | 15 |
| 06 | | | 3 | 13 |
| 07 | | மாகாண | 1 | 12 |
| 08 | | | 2 | 09 |
| 09 | | | 3 | 06 |
| 10 | குழு | சர்வதேச | 1 | 17 |
| 11 | | | 2 | 16 |
| 12 | | | 3 | 15 |
| 13 | | தேசிய | 1 | 13 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | | | 2 | 12 |
| 15 | | | 3 | 10 |
| 16 | | மாகாண | 1 | 08 |
| 17 | | | 2 | 05 |
| 18 | | | 3 | 02 |

உச்சப் புள்ளிகள் 60

## 6.2 பொது நியதிகள்

### 6.2.1. பொது நியதிகள் பகுதி . I

#### 6.2.1.1 புதிய கண்டுபிடிப்புகளுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

புதிய படைப்புக்கள்/ விஞ்ஞான ஆய்வுகள் தொடர்பில் வெளிப்படுத்தியுள்ள திறமைகளுக்கு இதன் கீழ் தரப்பட்டுள்ள அட்டவணை 06 இற்கேற்ப ஓர் படைப்பினை மட்டும் கருத்தில் கொண்டு புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.

**அட்டவணை 06: புத்தாக்கம் தொடர்பாக புள்ளி வழங்குதல் (பொது நியதிகள்)**

| இல. | போட்டி | மட்டம் | நிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | பேடன் உரிமை பெற்றிருத்தல் | | | 15 |
| 02 | புதிய படைப்புக்கள்/ விஞ்ஞான ஆய்வுகள் | தேசிய மட்டம் | முதலிடம் | 14 |
| 03 | | | இரண்டாமிடம் | 13 |
| 04 | | | மூன்றாமிடம் | 12 |
| 05 | | | திறமை | 11 |
| 06 | | | பங்கேற்றல் | 10 |
| 07 | | மாகாண மட்டம் | முதலிடம் | 09 |
| 08 | | | இரண்டாமிடம் | 08 |
| 09 | | | மூன்றாமிடம் | 07 |
| 10 | | | பங்கேற்றல் | 06 |
| 11 | | வலய மட்டம் | முதலிடம் | 05 |
| 12 | | | இரண்டாமிடம் | 04 |
| 13 | | | மூன்றாமிடம் | 03 |

உச்சப் புள்ளிகள் 15

#### 6.2.1.2 அழகியல் செயற்பாடுகளுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள்

அகில இலங்கை ரீதியிலான அழகியல் போட்டிகளில் தனி அல்லது குழுப் போட்டிகளில் குறித்த வருடத்திற்கு அண்மித்த 4 வருட காலத்தில் பெற்றுக்கொண்ட வெற்றிகள் மட்டும் கருத்தில் கொள்ளப்படும்.

**அட்டவணை 07 அழகியல் செயற்பாட்டுக்காகப் புள்ளி வழங்கல்**

| இல. | போட்டி | மட்டம் | நிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | தனி | தேசிய | 1 | 15 |
| 02 | | | 2 | 14 |
| 03 | | | 3 | 13 |
| 04 | | மாகாண | 1 | 12 |
| 05 | | | 2 | 11 |
| 06 | | | 3 | 10 |
| 07 | | வலய | 1 | 08 |
| 08 | | | 2 | 07 |
| 09 | | | 3 | 06 |
| 10 | | தேசிய | 1 | 12 |
| 11 | | | 2 | 11 |
| 12 | | | 3 | 10 |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | குழு | மாகாண | 1 | 08 |
| 14 | | | 2 | 07 |
| 15 | | | 3 | 06 |
| 16 | | வலய | 1 | 04 |
| 17 | | | 2 | 03 |
| 18 | | | 3 | 02 |

உச்சப் புள்ளிகள் 15

6.2.1.3 **விளையாட்டிற்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள்**

**அகில இலங்கை ரீதியிலான** விளையாட்டுப் போட்டிகளில் கூடியபட்சம் ஒரு தனி மற்றும்/ குழுப் போட்டிகள் மட்டும் கருத்தில் கொள்ளப்படுவதோடு, குறித்த வருடத்திற்கு அண்மித்த 4 வருட காலத்தில் பெற்றுக்கொண்ட வெற்றிகள் மட்டும் கருத்தில் கொண்டு அட்டவணை 08 ன் படி புள்ளிகள் வழங்கப்படும்.

**அட்டவணை 08 விளையாட்டுக்காகப் புள்ளிவழங்குதல் (பொது நியதி)**

| இல. | போட்டி | மட்டம் | நிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | தனி | தேசிய | 1 | 15 |
| 02 | | | 2 | 14 |
| 03 | | | 3 | 13 |
| 04 | | மாகாண | 1 | 12 |
| 05 | | | 2 | 11 |
| 06 | | | 3 | 10 |
| 07 | | வலய | 1 | 08 |
| 08 | | | 2 | 07 |
| 09 | | | 3 | 06 |
| 10 | குழு | தேசிய | 1 | 12 |
| 11 | | | 2 | 11 |
| 12 | | | 3 | 10 |
| 13 | | மாகாண | 1 | 08 |
| 14 | | | 2 | 07 |
| 15 | | | 3 | 06 |
| 16 | | வலய | 1 | 04 |
| 17 | | | 2 | 03 |
| 18 | | | 3 | 02 |

உச்சப் புள்ளிகள் 15

### 6.2.2 பொது நிபந்தனைகள் பிரிவு II

6.2.2.1 **வேறு துறைகளில் பெற்றுக்கொண்ட/ வெளிப்படுத்திய சர்வதேச மட்டத்திலான திறமைகள்**

விண்ணப்பிக்கும் பிரிவிற்கு மேலதிகமாக பங்குபற்றிய போட்டி/ செயற்பாடு ஒன்று மட்டும் இதன் கீழ் கருத்தில் கொள்ளப்படும்.

முதலாம் நிலை/ தங்கப் பதக்கம் - 05 புள்ளிகள்

இரண்டாம் நிலை/ வெள்ளிப் பதக்கம் - 03 புள்ளிகள்

மூன்றாம் நிலை/ வெண்கலப் பதக்கம் - 02 புள்ளிகள்

பங்கேற்றல் - 01 புள்ளிகள்

உச்சப் புள்ளிகள் 05

6.2.2.2 **இணைப்பாட விதானச் செயற்பாடுகள்**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பாட விதானச் செயற்பாடுகள் மட்டும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

**அட்டவணை 09 இணைப்படவிதானச் செயற்பாட்டுக்காகப் புள்ளிவழங்கல்**

| செயற்பாடுகள் | பெற்றுக்கொண்ட பதக்கங்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| சாரணர் (ஆண்/ பெண்) | ஜனாதிபதி சாரணர் பத்திரம் | 5 |
| | அடுத்தபடியான நிலை பதக்கங்கள் | 4 |
| | மாவட்ட ஆணையாளர் வழங்கிய 1ம்/ 2ம் மட்டத்தினை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் | 2 |
| | சாரணராயிருத்தல் | 1 |
| மாணவர் படையணி | அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் 1 | 5 |
| | அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் 2/ சர்ஜன்ட் மேஜர் | 4 |
| | கோப்றல் | 3 |
| | லான்ஸ் கோப்றல் | 2 |
| | மாணவர் படையணி | 1 |
| சுற்றாடல் வழிகாட்டி | ஜனாதிபதிப் பதக்கம் | 5 |
| | தங்கப்பதக்கம் | 4 |
| | ரஜத பதக்கம் | 3 |
| | ஹரித பதக்கம் | 2 |
| | சுற்றாடல் பதக்கம் | 1 |

**உச்சப் புள்ளிகள் 05**

### 6.2.2.3 மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட அனைத்துப் பாடங்களுடன் தொடர்பான செயற்பாடுகள்

கல்வி அமைச்சின் ஒருங்கிணைப்புடன் நடாத்தப்படும் அகில இலங்கை ரீதியிலாக செயற்படுத்தப்படும் ஆக்கத்திறன் மற்றும் தத்துவ அடிப்படையிலான கவிதைகள், சிறு கதைகள், கட்டுரைகள், விவாதங்கள், பேச்சு, கணிதம் மற்றும் விஞ்ஞான ஒலிம்பியாட் போன்ற செயற்பாடுகள்/ போட்டிகள் இதன் போது கருத்தில் கொள்ளப்படும். அவ்வாறே குறித்த வருடத்திற்கு அண்மித்த 4 வருட காலத்தில் பெற்றுக்கொண்ட **வெற்றிகளை மட்டும்** கருத்தில் கொண்டு அட்டவணை 10 இற்கேற்ப புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

**அட்டவணை 10 மொழி, கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட ஏனைய பாடங்களுக்காகப் புள்ளி வழங்கப்படும்.**

| நிலை | வழங்கப்படும் புள்ளிகள் |
|---|---|
| 1 | 5 |
| 2 | 3 |
| 3 | 2 |

உச்சப் புள்ளிகள் 05

### 6.2.2.4 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் தொடர்பான செயற்பாடுகள்

கல்வி அமைச்சின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பக் கிளையினது ஒருங்கிணைப்புடன் நடாத்தப்படும் மென்பொருள் உருவாக்கம், இணையத்தள உருவாக்கம் போன்ற தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் துறையுடன் தொடர்புடைய போட்டிகள் இதன் போது கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

**அட்டவணை 11 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப செயற்பாட்டுக்காக புள்ளிவழங்கல்**

| நிலை | வழங்கப்படும் புள்ளிகள் |
|---|---|
| 1 | 5 |
| 2 | 3 |
| 3 | 2 |

உச்சப் புள்ளிகள் 05

### 6.2.2.5 க.பொ.த.(உ.த) இற்கு அனுமதிக்கப்படுவதற்கான க.பொ.த.(சா.தர) பெறுபேறு

**அட்டவணை 12 க.பொ.த.(ச.தர)ற்காக புள்ளி வழங்கல்**

| | |
|---|---|
| 9 பாடங்களுக்கும் A சித்தி பெற்றிருத்தல் | 05 புள்ளிகள் |
| யாதாயினும் 6 பாடங்களிற்கு அல்லது அதனிலும் அதிகமான பாடங்களிற்கு A சித்தியும் ஏனைய பாடங்களிற்கு B/C சித்தியும் கலந்து பெற்றிருத்தல் | 04 புள்ளிகள் |
| யாதாயினும் 4 அல்லது 5 பாடங்களிற்கு A சித்தியும் ஏனைய பாடங்களிற்கு B/C சித்தியும் கலந்து பெற்றிருத்தல் | 03 புள்ளிகள் |
| யாதாயினும் 2 பாடங்களிற்கு A சித்தியும் ஏனைய பாடங்களிற்கு B/C/S சித்தியும் கலந்து பெற்றிருத்தல் | 02 புள்ளிகள் |
| 3 திறமைச் சித்திகளுடன் சகல பாடங்களும் சித்தியெய்திருத்தல் | 01 புள்ளிகள் |

உச்சப் புள்ளிகள் 05

**மொத்தப் புள்ளிகள் 100**

**6.3 நேர்முகப் பரீட்சையின் போது கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள்.**

6.3.1 சர்வதேச போட்டிகளுக்கான புள்ளி வழங்கலின்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமையில் நடாத்தப்பட் போட்டிகள் கவணத்திற் கொள்ளப்படும்.

6.3.2 புதிய கண்டுபிடிப்புக்கான வெற்றிகளை கணிப்பிடும்போது இலங்கை பொறியியல் சங்கம், புதிய கண்டுபிடிப்புக்கான ஆணைக்குழு, இலங்கை விஞ்ஞான மன்றம் அல்லது பல்கலைகழங்கள் ஊடாக இடம்பெற்ற போட்டிகளில் பெற்ற வெற்றிகளே கவனத்திற் கொள்ளப்படும்.

6.3.3 அழகியற் போட்டிகளின் பெற்றிகளை கணிப்பிடும்போது கல்வி அமைச்சின் அழகியற் கிளையினூடாக இடம்பெற்ற போட்டிகள் கவனத்திற் கொள்ளப்படும். நாடகங்களுக்காக கல்வி அமைச்சு, கலாச்சார அலுவல்கள் திணைக்களம், டவர் மண்டபம் போன்ற நிறுவனங்கால் நடாத்தப்படும் அரச நாடக விழா, அகில இலங்கை பாடசாலை நாடக போட்டிகள், அகில இலங்கை நாடக விழாக்கள் போன்றவற்றில் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த நடிகர், நடிகை, துனை நடிக நடிகைகள், போன்ற முதலாம் இரண்டாம் நிலைகள் கவணத்திற் கொள்ளப்படும்.

6.3.4 விளையாட்டுப் பிரிவில் மாணவர்களை தெரிவுசெய்யும்போது கல்வி அமைச்சின் விளையாட்டுப் பிரிவு, பாடசாலை விளையாட்டு சங்கங்கள், விளையாட்டு அமைச்சின் ஊடாக நடைபெறும் போட்டிகள் என்பன கவனத்திற் கொள்ளப்படும்.

**07 புலமைப் பரிசில் வழங்கல்**

7.0 இரண்டாம் நிலைக் கல்வியில் விசேட திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் தரம் 12ல் இணைந்து க.பொ.த. (உ.தரம்) கற்கும் இரண்டு வருட காலப்பகுதியில் ஓர் வருடத்திற்கு மாதத்திற்கு ரூபா.2500 என்றவாறு 20 தவணைகள் புலமைப் பரிசிலானது வழங்கப்படும். உரிய பணத்தொகையானது புலமைப் பரிசில்தாரர்களினது பெயரில் திறக்கப்பட்ட வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்புச் செய்யப்படும்.

7.1 இப் புலமைப் பரிசில்தாரர்களை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்வதற்காக அவ்வப் பாடசாலைகளினால் பொருத்தமான ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியதோடு அவ் ஆசிரியரினால் புலமைப்பரிசில்தாரரிற்கு உரிய வழிகாட்டல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

7.2 கல்வி அமைச்சினால் இப் புலமைப்பரிசிலிற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களினது பெயர்கள் உரிய பாடசாலைகளிற்கு அறிவிக்கப்பட்டதன் பிற்பாடு, அதிபரினால் இப் புலமைப்பரிசில்தாரர் அப் பாடசாலையில் தொடர்ந்தும் கல்வி கற்கின்றார் என்பதையும், புலமைப் பரிசிலினைப் பெற அவர் பொருத்தமானவர் என்பதனையும் உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றினை வலயக் கல்விப் பணிப்பாளரிற்குப் பிரதியுடன் கல்வி அமைச்சின் பாடசாலைச் செயற்பாடுகள் கிளைக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதன் பின்னர் புலமைப் பரிசில் வழங்கப்படும் உரிய காலப்பகுதியினுள்ளும் பாடசாலை அதிபரினால் அப் புலமைப் பரிசில்தாரர் அப் பாடசாலையில் தொடர்ந்தும் கல்வி கற்கின்றார் என்பதனை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றினை வலயக் கல்விப் பணிப்பாளரிற்குப் பிரதியுடன் கல்வி அமைச்சின் பாடசாலைச் செயற்பாடுகள் கிளைக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

7.3 உரிய மாணவர் ஏதேனும் காரணங்களுக்காக வேறு பாடசாலைக்கு சென்றிருப்பின் அது தொடர்பான விபரங்களை உரிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கும், மாகாண கல்விப் பணிப்பாளரருக்கும், கல்வி அமைச்சின் பாடசாலைகள் செயற்பாட்டுக்கிளைப் பணிப்பாளருக்கும் தெரியப்படுத்தல் வேண்டும்.

07. புலமைப்பரிசில் மேற்பார்வை

i. வலய மட்டத்தில், புலமைப்பரிசில்தாரிகள் கல்வி கற்கும் வலயங்களுடாக உரிய வலய சுபக இணைப்பாளர் மூலம் மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.
ii. மாகாண மட்டத்தில், புலமைப்பரிசில்தாரிகள் கல்வி கற்கும் மாகாணங்களுடாக உரிய மாகாண சுபக இணைப்பாளர் மூலம் மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.
iii. தேசிய மட்டத்தில், கல்வி அமைச்சின் பாடசாலை செயற்பாடுகள் கிளையூடாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.

09. புலமைப்பரிசில் நிறுத்தப்படும் சந்தர்ப்பங்கள்:

கீழ்காணப்படும் சந்தர்ப்பங்களில் சுற்றுநிருபத்தின் ஊடாக மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் நிறுத்தப்படும்.

i. புலமைப்பரிசில்தாரி ஏதேனும் காரணமொன்றுக்காக தண்டனை பெற்றிருத்தல்
ii. தொடர்ச்சியான பாடசாலைக்கு வரவின்மை
iii. தொடர்ச்சியாக கல்வி நடவடிக்கையில் பங்கேற்பின்மை
iv. க.பொ.த (உ/த) பூரணப்படுத்தப்படாமல் பாடசாலையிலிருந்து விலகல்.

இந்த சுற்றறிக்கைக்கு புறம்பான ஏதேனும் சந்தர்ப்பங்களில் கல்விச் செயலாளரின் முடிவு இறுதியாக அமையும்.

சுனில் ஹெட்டிஆராய்ச்சி
செயலாளர்
கல்வி அமைச்சு

இணைப்பு 02 (A)

## சுபக புலமைப்பரிசில் வேலைத்திட்டம்
## தெரிவு செய்யப்பட்ட மாணவர் பெயர் பட்டியல் - பாடசாலை மட்டம்
(ஆங்கிலத்தில் பூரணப்படுத்துக)

1. பாடசாலையின் விபரங்கள்
   1.1. பாடசாலையின் பெயர் :- ...........................................................
   1.2. பாடசாலையின் முகவரி :- ...........................................................
   1.3. தொலைபேசி இல :- ...........................................................
   1.4. தேசிய/ மாகாண பாடசாலை :- ...........................................................
   1.5. வலயம் :- ...........................................................
   1.6. மாகாணம் :- ...........................................................
2. பிரிவு

(பிரிவினைக் காட்டுவதற்கு உரிய கூட்டினுள் ✔ என இடுக)

| | |
|---|---|
| பிரிவு 01 – புதிய கண்டுபிடிப்புக்களுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள் | |
| பிரிவு 02 – அழகியற் செயற்பாடுகளுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள் | |
| பிரிவு 03 – விளையாட்டப் போட்டிகள் மூலம் பெற்றுக் கொண்ட வெற்றிகள் | |

3. தெரிவு செய்யப்பட்ட மாணவர் விபரம்

| தொடர் இல | விண்ணப்பதாரியின் பெயர் | தனிப்பட்ட முகவரி | தொலைபேசி இல | பெற்றுக் கொண்ட புள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | விசேட நியதிகள் | பொது நியதிகள் | மொத்தப் புள்ளிகள் |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

4. பாடசாலைக்குக் கிடைத்த விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை :- ...........................................................
5. வலயங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட மொத்த விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை :- ...........................................................
6. தெரிவு செய்யப்பட்ட மொத்த விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை :-

பாடசாலைக்குக் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப் படிவங்களிலிருந்து பாடசாலைத் தெரிவுக்குழுக்களினூடாகப் பரிசீலிக்கப்பட்டு சுற்றுநிருபத்திற்கிணங்க புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் ..................... (எண்ணிக்கையில் குறிப்பிடுக) வலயக் கல்விப் பணிப்பாளருக்கு முன்வைக்கப்படுகின்றது.

அதிபர் ஒப்பம் :- ................................................ திகதி :- ................................................

அலுவலக முத்திரை :- ...........................................

இணைப்பு 02 (B)

# சுபக புலமைப்பரிசில் வேலைத்திட்டம்
## தெரிவு செய்யப்பட்ட மாணவர் பெயர் ப்டடியல் - வலய மட்டம்
(ஆங்கிலத்தில் பூரணப்படுத்துக)

வலயம் :- ...................................................... மாகாணம் :- ......................................................

1. பிரிவு (பிரிவினைக் காட்டுவதற்கு உரிய கூட்டினுள் ✔ என இடுக)

| | |
|---|---|
| பிரிவு 01 – புதிய கண்டுபிடிப்புக்களுக்காக பெற்றுக் கொண்ட வெற்றிகள் | |
| பிரிவு 02 – அழகியற் செயற்பாடுகளுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள் | |
| பிரிவு 03 – விளையாட்டப் போட்டிகள் மூலம் பெற்றுக் கொண்ட வெற்றிகள் | |

2. தெரிவு செய்யப்பட்ட மாணவர் விபரம்

| தொடர் இல | விண்ணப்பதாரியின் பெயர் | பாடசாலை | பாடசாலையின் முகவரி | தனிப்பட்ட முகவரி | தொலைபேசி இல | பெற்றுக் கொண்ட புள்ளிகள | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | விசேட நியதிகள் | பொது நியதிகள் | மொத்தப் புள்ளிகள் |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

3. வலயத்திற்குக் கிடைத்த விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை :- ..................................................................
4. மாகாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட மொத்த விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை :- ..................................................................
5. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாகாணக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல்.

வலய மட்டத்தில் சுற்று நிருபங்களுக்கிணங்க தெரிவு செய்யப்பட்ட மாணவர் பெயர் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பெயர்ப் பட்டியல்கள் சரியானவை என உறுதிப்படுத்தி மாகாணக்கல்வித் திணைக்களத்திற்கு முன்வெக்கின்றேன்.

வலயக் கல்விப் பணிப்பாளரின் ஒப்பம் :- .................................................................. திகதி : - ..............................................

அலுவலக முத்திரை :- ..................................................................

இணைப்பு 03

**(ஆங்கிலத்தில் பூரணப்படுத்துக)**

1. மாணவ/ மாணவியின் முழுப் பெயர் :- ..............................................................................................................................

2. கல்வி கற்கும் பாடசாலை :- ..............................................................................................................................

3. மாணவ/ மாணவியின் இலங்கை வங்கி/ மக்கள் வங்கி கணக்கிலக்கம் :- .............................. கிளை இல:- .......................
   (கணக்கிலக்கம் பொறிக்கப்பட்ட வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பக்கத்தின் நிழற் பிரதியினையும் இணைத்தல் வேண்டும்)

4. தாய்/ தந்தை/ பாதுகாவலர் பெயரும் முகவரியும் :- ..............................................................................................................................
   ..............................................................................................................................................................................

   தொலைபேசி இல :- ...........................................................

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் உன்மையானத எனவும் பிழையற்றது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

......................................................... ..............................................................

மாணவ/ மணவியின் கையொப்பம் தாய்/ தந்தை/ பாதுகாவலர் ஒப்பம்

திகதி :- ...............................

அதிபரின் சிபாரிசு :-
மேற்குறிப்பிடப்பட்ட மாணவன்/ மணவி இந்தப் பாடசாலையில் தரம் 12 இல் கல்விகற்றுக் கொண்டிருக்கிறார் எனவும் மேலே வழங்கப்பட்ட தகவல்கள் உன்மையாவவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். குறித்த மாணவரின் வங்கிப் புத்தகத்தின் கணக்கிலக்கம் பொறிக்கப்பட்ட நிழற் பிரதியினையும் சன்றுப்படுத்தி அனுப்புகின்றேன்.

அதிபரின் ஒப்பம் மற்றும் பதவி முத்திரை :- ........................................ திகதி :- ............................

இணைப்பு 04

சுபக புலமைப்பரிசில் வேலைத்திட்டம்
தெரிவு செய்யப்பட்ட மாணவர் பெயர் ப்டடியல் - மாகாண மட்டம்
(ஆங்கிலத்தில் பூரணப்படுத்துக)

மாகாணம் :- ............................

1. தெரிவு செய்யப்பட்ட மாணவர் விபரம்

| தொடர் இல | வலயம் | பிரிவு (01/02/03) | புலமைப்பரிசில் தாரர்களின் பெயர் | பாடசாலையின் பெயர் | பாடசாலையின் முகவரி | மாணவரின் முகவரி | தொலைபேசி இல | பேற்றுக் கொண்ட புள்ளிகள் | வங்கிக் கணக்கு இலக்கம் | வங்கிக் கிளை இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

2. கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை :- ..........................................

3.

மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பங்கள் மாகாணத் தெரிவுக்குழு/ குழுக்கள் ஊடாக பரிசீலிக்கப்பட்டு சுற்றுநிருபத்தின் பிரிவுகளில் சுபக புலமைப்பரிசில் தாரிகளுடைய தெரிவு செய்யப்பட்ட பெயர்ப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பெயர் பட்டியல் மற்றும் மாணவர் வங்கிகக் கணக்கு விபரங்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஒப்பம் :-.......................................................... திகதி :-.....................................................

பதவி முத்திரை :-................................

மாகாணக்கல்வித் திணைக்கள
உபயோகத்திற்கு (உ- ம் WP/01/150)

இணைப்பு இல – 01

அளவு
1.5X2

(பாஸ்போட்
அளவிலான)

# சுபஹு புலமைப்பரிசில் - 2018
## விண்ணப்பப்படிவம்

மாகாணம் :-

மாவட்டம் :-

பாடசாலை :- ..........................................................................................

பத்திரிகை விளம்பரத்தில் கூறப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய உரிய பிரிவுகளை தெரிவுசெய்து சரியாகப்பூரணப்படுத்தவும். ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளுக்கு விண்ணப்பிப்பதாயின் வேறு வேறாக விண்ணப்பிக்கவும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்தோடும் அந்த பிரிவுகளுக்குரிய தனித்தனியாக உறுதிப்படுத்தும் ஆவணங்களையும் இணைக்கவும்.

**1. கோரும் பிரிவு :-**

| | |
|---|---|
| பிரிவு இல 01 | |
| பிரிவு இல 02 | |
| பிரிவு இல 03 | |

**2. மாணவன்/ மாணவியின் தகவல்கள் :-**

**2.1 மாணவன்/ மாணவியின் முழுப்பெயர் :-**

..........................................................................................

2.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :-
(ஆங்கில பெரிய எழுத்துக்களில் எழுதுக)

2.3 தனிப்பட்ட முகவரி :-
(ஆங்கில பெரிய எழுத்துக்களில் எழுதுக)

2.4 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :-

2.5 பிறந்த திகதி :- ஆண்டு மாதம் திகதி

2.6 ஆண்/ பெண் பால்:- ஆண் பெண்

2.7 க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை :-
(ஆங்கில பெரிய எழுத்துக்களில் எழுதுக)

2.8 க.பொ.த (உ.த) காக வேறு பாடசாலைக்கு சென்றிருப்பின் அப்பாடசாலையின் விபரம் :-
(ஆங்கில பெரிய எழுத்துக்களில் எழுதுக )

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

**3.**

ககீழ்க்காணும் தேர்வளவுகளுக்கமைய மாணவ/ மாணவி வெயிப்படுத்தியுள்ள திறமைகளைக் குறிப்பிடுக. உயர் திறமைகளை வெளிப்படுத்திய/ உயர் புள்ளிகளைப் பெற்ற சந்தர்ப்பங்கள் மூன்றினை மட்டும் குறிப்பிடுக.

| விபரம் | புள்ளிகள் (அலுவலக உபயோகத்திற்காக) | | |
|---|---|---|---|
| | பாடசாலை மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் |
| | நிரல் இல 01 | நிரல் இல 02 | நிரல் இல 03 |
| **3.1** புதிய கண்டுபிடிப்புக்கள் மூலமாகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள் | | | |
| **3.2** அழகியற் செயற்பாடுகள் மூலமாகப் பெற்றுக்கொண்ட வெற்றிகள் | | | |

**3.1** புதிய கண்டுபிடிப்புக்கள் மூலமாகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

| புதிய கண்டுபிடிப்பு/ விஞ்ஞானப் பரிசோதனை | உரிமம் பதிவு செய்யப் பட்டதா/ இல்லையா | பெற்றுக் கொண்ட வருடங்கள் | பெற்றுக் கொண்ட வெற்றிகள் | | | போட்டிகளை நடத்திய நிறுவனம் |
|---|---|---|---|---|---|---|
| | | | சர்வதேச | தேசிய | மாகாண | |
| | | | (1/2/3/ பங்குபற்றல்) | (1/2/3/ ஆற்றல்) | (1/2/3/ பங்குபற்றல்) | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**3.2** அழகியற் செயற்பாடுகள் மூலமாகப் பெற்றுக்கொண்ட வெற்றிகள்

| அழகியல் செயற்பாடுகள்/ போட்டிகள் | தனி/ குழு | பெற்றுக்கொண்ட வருடங்கள் | பெற்றுக் கொண்ட வெற்றிகள் | | | போட்டிகளை நடத்திய நிறுவனம் |
|---|---|---|---|---|---|---|
| | | | சர்வதேச | தேசிய | மாகாண | |
| | | | (1/2/3/ பங்குபற்றல்) | (1/2/3 ) | (1/2/3) | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

### 3.3 விளையாட்டுக்களில் பங்கேற்றிப் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

| பங்குபற்றிய விளையாட்டு | *தனி/ குழு | பெற்றுக்கொண்ட வருடங்கள் | பெற்றுக் கொண்ட வெற்றிகள் | | | போட்டிகளை நடத்திய நிறுவனம் |
|---|---|---|---|---|---|---|
| | | | சர்வதேச (1/2/3/ பங்குபற்றல்) | தேசிய (1/2/3/ ) | மாகாண (1/2/3) | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

### 3.4 சர்வதேச மட்ட வெற்றிகள்

கோரப்பட்ட பிரிவிற்கு மேலதிகமாக பங்குபற்றிய போட்டி/ செயற்பாடு ஒன்றினை மாத்திரம் குறிப்பிடுக.

| போட்டிகள்/ செயற்பாடுகள் | பங்குபற்றிய வருடம் | பெற்றுக் கொண்ட வெற்றிகள் (1/2/3/ பங்குபற்றல்) | போட்டிகளை நடத்திய நிறுவனம் |
|---|---|---|---|
| | | | |

### 3.5 இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

| இணைப்பாட விதான செயற்பாடுகள் | பெற்றுக் கொண்ட பதக்கங்கள் |
|---|---|
| சாரணர் (ஆண்) | |
| சாரணர் (பெண்) | |
| படையணி சிவில் | |
| சூழல் முன்நேற்றம் | |

### 3.6 அகில இலங்கை மட்டங்களில் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட அனைத்துப் பாடங்களிலும் பெற்றுக் கொண்ட வெற்றிகள்

| போட்டிகள்/ செயற்பாடுகள் | பங்கேற்ற வருடம் | பேற்றுக்கொண்ட நிலை (1/2/3/ பங்கேற்றல்) | போட்டிகளை நடத்திய நிறுவனம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

### 3.7 அகில இலங்கை மட்டங்களில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலில் வெற்றுக் கொண்ட வெற்றிகள்

| போட்டிகள்/ செயற்பாடுகள் | பங்கேற்ற வருடம் | பெற்றுக்கொண்ட நிலை (1/2/3/ பங்குபற்றல்) | போட்டிகளை நடத்திய நிறுவனம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

| **3.8** க.பொ.த (உ.த)ற்காக அனுமதிப்பதற்கான க.பொ.த. (சா.த) பெறுபேறுகள் | | | |
|---|---|---|---|
| | | | |

i.க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றிய வருடம் :- ..................

ii.க.பொ.த (சா.த) பரீட்சை இலக்கம் :- ..................................

iii. க.பொ.த (சா.த) பரீட்சைப் பெறுபேறுகளை கீழ்க்காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடுக

| தொடர் இலக்கம் | பாடங்கள் | பெறுபேறுகள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |

ஸஎன்னால் மேற்கூறபபட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் பிழையற்றவை எனவும் சுஹக புலமைப்பரிசில் பெற்றுக்கொள்வதற்காக நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் அப்புலமைப்பரிசிலுக்குரிய விதிமுறைகளுக்கமைய செயற்படுவேன் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். என்னால் தரப்பட்ட தகவல்கள் அல்லது ஆவணங்களில் ஒன்று பொய்யானது அல்லது பிழையானது எனத்தெரியவரின் எனது புலமைப்பரிசில் நிறுத்தப்படும் என்பதனை நான் அறிவேன்.

திகதி : .........................  ..................................

மாணவரின் ஒப்பம்.

### க.பொ.த (சா/த) கல்வி கற்ற பாடசாலை அதிபரின் உறுதியுரை

.......................................................................................... மாணவன்/ மாணவி க.பொ.த. (சா.த) பரீட்சைக்கு இப் பாடசாலையிவேயே தோற்றினார், இம் மாணவன்/ மாணவியின் சிறந்த ஒழுக்கமுடையவராகவும் கற்பதில் ஆர்வம் காண்பிப்பவர் என்பதனாலும் சுஹக புலமைப்பரிசிலுக்கு பரிந்துரை செய்கிறேன்.

பாடசாலையின் தொலைபேசி இல: ..............................

..............................

அதிபரின் ஒப்பமும் பதவி முத்திரையும்

### க.பொ.த (உ/த) கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் உறுதியுரை

............................................................................... மாணவன்/ மாணவி ......... தரத்திலிருந்து இப்பாடசாலையில் கல்வி கற்பதனாலும், க.பொ.த. (உ.த)ல் கல்வி கற்பதற்காக ........................................................... கல்லூரியில் இருந்து வந்துள்ளார் இம் மாணவன்/ மாணவியின் சிறந்த ஒழுக்கமுடையவராகவும் கற்பதில் ஆர்வம் காண்பிப்பவர் என்பதனாலும் சுஹக புலமைப்பரிசிலுக்கு சிபார்சு வழங்குகின்றேன்.

பாடசாலையின் தொலைபேசி இல: ..............................

..............................

அதிபரின் ஒப்பமும் பதவி முத்திரையும்

## அலுவலக உபயோகத்திற்காக

**ஒரு மாணவன்/ மாணவி விண்ணப்பித்துள்ள பிரிவுகளுக்கமைய தீர்மானிக்கப்பட்ட பத்து விடயங்களுக்கும் புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.**

**விண்ணப்பிக்கும் பிரிவு :-**

| | |
|---|---|
| பிரிவு இல 01 | |
| பிரிவு இல 02 | |
| பிரிவு இல 03 | |

| | | தேர்வுகள் | வழங்கக்கூடிய உச்ச புள்ளிகள் | வழங்கிய புள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | பாடசாலை மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் |
| விசேட தேர்வு | i. | புதிய கண்டுபிடிப்புக்களுக்காகப் பெற்ற வெற்றிகள் | 60 | | | |
| | ii. | ஆழகியற் செயற்பாடுகளுக்காகப் பெற்ற வெற்றிகள் | 60 | | | |
| | iii. | விளையாட்டுக்களுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள் | 60 | | | |
| பொது தேர்வு I | i. | புதிய கண்டுபிடிப்புக்களுக்காகப் பெற்ற வெற்றிகள் | 15 | | | |
| | ii. | ஆழகியற் செயற்பாடுகளுக்காகப் பெற்ற வெற்றிகள் | 15 | | | |
| | iii. | விளையாட்டுக்களுக்காகப் பெற்றுக் கொண்ட வெற்றிகள | 15 | | | |
| பொது தேர்வு II | iv. | யாதுமொரு துறையில் சர்வதெச மட்டத் திறமை | 05 | | | |
| | v. | இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் | 05 | | | |
| | vi. | மொழி, கணித மற்றும் விஞ்ஞானம் தொடர்பான செயற்பாடுகள் | 05 | | | |
| | vii. | தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் | 05 | | | |
| | viii. | க.பொ.த (உ.த) காக அனுமதிப்பதற்கான க.பொ.த. (சா.த) பெறுபேறுகள் | 05 | | | |
| **மொத்தப் புள்ளிகள்** | | | **100** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| பாடசாலை மட்டத் தெரிவு செய்யும் குழுவின் சிபார்சு | மேற்குறித்த புள்ளிகள் சரியானது என உறுதிப்படுத்துகின்றோம் | 1................. | 2................ | 3............... |
| வலய மட்டத் தெரிவு செய்யும் குழுவின் சிபார்சு | மேற்குறித்த புள்ளிகள் சரியானது என உறுதிப்படுத்துகின்றோம் | 1................. | 2............... | 3................. |
| மாகாண மட்டத் தெரிவு செய்யும் குழுவின் சிபார்சு | மேற்குறித்த புள்ளிகள் சரியானது என உறுதிப்படுத்துகின்றோம் | 1................. | 2............... | 3................. |